2004 பிப்ரவரி 5]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜாஜி மருத்துவமனையில் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கு வழக்கு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே பல அரசு மருத்துவமனைகளிலே இதேபோன்று 'Contingency' என்ற முறையிலே பல பணியாளர்கள் பல வருடங்களாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு அரசு ஏதேனும் ஒரு திட்டத்தை உருவாக்கி, அப்படி ஒரு 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றக் கூடியவர்களையாவது உடனடியாக நிரந்தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கிட்டத்தட்ட 468 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் அனைவருமே நீதிமன்றத்திற்குச் சென்றதால்—மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கும்போது, தற்சமயம் அவர்கள் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் இருப்பதால்—நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடனே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

9–

ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி

***10720–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருவாரூர் மாவட்டம், எடையூர் ஊராட்சி, சோத்திரியம் கிராமத்தில் ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2004 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடையூர், சோத்திரியம் கிராமம் முழுமையாகவே ஆதிதிராவிடர்கள் நிறைந்து இருக்கிற பகுதி. அந்த எடையூரிலே மேல்நிலைப் பள்ளி இருந்தும்கூட, மாணவர்கள் ஆற்றைத் தாண்டிக் கடந்து வர வேண்டியிருக்கிறது. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் முற்றிலும் ஆதிதிராவிடர்களாக இருப்பதால்—இதுவரை ஆதிதிராவிட நலத் துறையிலிருந்து இதுபோன்று பள்ளிகளைத் தொடங்காத துறையாக அந்தத் துறை இருந்துகொண்டிருக்கிறது—அந்தக் கிராமத்திலாவது கருணை கூர்ந்து ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியைத் தொடங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், எடையூர் ஊராட்சி, சோத்திரியம் கிராமத்தில் சுமார் 82 ஆதிதிராவிடர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அக்குடும்பங்களிலிருந்து 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை 15 மாணவர்களும், 17 மாணவியர்களும், ஆக மொத்தம் 32 மாணாக்கர்கள் மட்டும் எடையூரில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தொடக்கப் பள்ளியில் பயின்று வருகின்றனர். மேலும் எடையூரில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இதைத் தவிர, 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அம்மனூரில் இரண்டு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. தற்போது ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் தேவைக்கேற்ப ஆங்காங்கே செயல்பட்டு வருவதால் சோத்திரியம் பகுதிக்கு எனத் தனியாக ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாகத் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், சோத்திரியம் கிராமப் பகுதி மாணவர்கள் இரண்டு ஆறுகளைக் கடந்து வந்து படிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படி வந்த மாணவர்களில் ஒருவர் பாலத்திலே இருந்து தவறி விழுந்து இறந்து போனதால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் வலியுறுத்தி இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

2004 பிப்ரவரி 5]

'அனைவருக்கும் கல்வி' என்கிற Sarva Siksha Abhiyan திட்டத்தில்கூட அதனைச் சேர்க்க வேண்டுமென்று முயற்சி எடுத்தோம். நடக்கவில்லை. ஆகையினால், முற்றிலுமாக ஆதிதிராவிடர்களாக இருப்பதால், அரசு இதை மறுபரிசீலனை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாணவ, மாணவியர்களுடைய கருத்தை, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

10–

பேருந்து பணிமனை

***9681**–**திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருப்பத்தூர் தொகுதியில், சிங்கம்புணரி நகரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அரசுப் போக்குவரத்துப் பணிமனை துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் கோரியுள்ளது போன்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கே.கே. உமாதேவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகமாக இருந்து, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகமாக, காரைக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.